## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 56/2018

PW1 – திரு. வேதமாணிக்கம் நாள். 02.12.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நத்தம் வகைப்பாடு செய்யப்பட்ட நிலங்களுக்கு எப்போது பட்டா வழங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் சர்வே எண் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.26/9 சொத்தின் முழு விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. சர்வே எண்.26/9 எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் நான்கு பேருக்கு பிரிக்கப்பட்டது.

2. பிராதில் சர்வே எண்.26/35 என உட்பிரிவு சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி இருப்பேன். மேற்படி சொத்திற்கு நான்குமால் விவரங்கள் என்னவென்றால் மேற்கு பாதை, கிழக்கு சந்தியாகு மகன், வடக்கு பாதை, தெற்கு ராயப்பன் மகன்கள். எவ்வளவு விஸ்தீரணத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான்கில் ஒரு பங்குகேட்டுள்ளேன் அதன் விஸ்தீரணம் 3 செண்டிற்கு கூடுதலாக இருக்கும்.

3. சர்வே எண்.26/35 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் கூட்டு பட்டாவாக உள்ளது. மேற்படி கூட்டு பட்டாவின் எண் என்னவென்றால் ஞாபகமில்லை. மேற்படி கூட்டு பட்டாவின் நகல் உள்ளதா என்றால் பார்த்தால் தான் தெரியும். மேற்படி சொத்து எனது தகப்பனாருக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக சொத்தாகும். 1991க்கு முன்பு கிராம நத்தம் என இருந்தது என்றும், பூர்வீக சொத்து என எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

4. எனது பிராதில் சந்தியாகு என்பவருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என சொல்லி உள்ளேன் என்றும் அது பூர்வீக பாத்தியப்பட்டதா அல்லது சுய சம்பாத்திய சொத்து என பிராதில் குறிப்பிடபடவில்லை என்றால் சொல்லி உள்ளேன், அது பூர்வீக பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தில் பிரதிவாதி எப்போது வீடு கட்டினார் என்றால் இப்போது தான் கட்டினார். மேற்படி வீட்டிற்கு எப்போது கிரகபிரவேசம் வைத்தார் என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு.

5. எத்தனை அடிக்கு எத்தனை அடி வீடு கட்டி உள்ளார் என்றால் ஞாபகமில்லை, தற்போது சொல்ல முடியாது. நான் எனது பிராதில் அனுபவத்தை தடையிடைஞ்சல் செய்யக்கூடாது என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லப்பட்ட பின் அதை நீக்குவதற்கு எந்த பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி வீடு எவ்வளவு மதிப்பு போகும் என்றால் 1 லட்சத்திற்கு குறைவாக தான் இருக்கும்.

6. மேற்படி வீடு மாடி வீடா என்றால் மாடி வீடு தான். எங்கள் ஊரில் ஒரு செண்ட் எவ்வளவு ரூபாய் போகம் என்றால் நான்காயிரம் ரூபாய். அசல் வழக்கு எண்.142/68 வழக்கின் தீர்ப்பாணை நகல் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தீர்ப்பாணை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலை

தெரியவரும் என்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல்  செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. அசல் வழக்கு 142/68 சொத்து வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.  நான் சொல்வது போல் இரண்டு வருடங்களுக்கு முன்பு வீடு கட்டவில்லை என்றும் அவர் வீடு கட்டி 25 வருடங்கள் இருக்கும் என்றல் சரியல்ல.  நான் எத்தனை வருடங்களாக வீடு கட்டி உள்ளேன் என்றால் 7, 8 வருடங்கள் இருக்கும். பிராதில் நான் வீடு கட்டி உள்ள விவரங்களை சொல்லி உள்ளேனா  என்றால் சொல்லிஉள்ளேன்.  அசல் வழக்கு எண்140/2009 என எனக்கும் எனது ஊர்காரர்களுக்கும் பாதை தொடர்பாக வழக்கு நடைபெற்றதா என்றால் சரிதான்.

8. எனது சொத்தில் பாதியையும் பிரதிவாதி சொத்தில் பாதியையும் பாதையாக பயன்படுத்தி வருகிறோம் என ஊர் மக்கள் மேற்படி வழக்கில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான்.  மேற்படி வழக்கில் பிரதிவாதி அவரது சொத்தை பாதையாக தான் பயன்படுத்தி வருகிறார்கள் என மேற்படி வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.  அவ்வாறு பிரதிவாதி சொன்னதால் எனக்கும் பிரதிவாதிக்கும் முன் விரோதம் உள்ளது என்றால் சரியல்ல.

9. அதனால் தான் இவ்வழககு பிரதிவாதி மீது பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.  வழக்கில் கேட்கப்பட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)**

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை